Bundesamt
für Migration
und Flüchtlinge

# வகுப்பு நிறுவனத்திற்கும் வகுப்பில் பங்கேற்பவருக்கும் இடையிலான ஒப்பந்தம் § 8 பகுதி 4 டொச்மொழிஊக்குவிப்புநிபந்தனைக்கு (DeuFöV) இணங்கிய

**மொழிஇலகுக் காரணங்களுக்காக பின்வருபவைகளில் ஆண்பால் சொற்கள் மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றன. இருந்தும் எப்போதும் ஆண் பெண் பால் சார்ந்த நபர்கள் கருதப்படுகின்றன.**

**இடையில்**

| |
|---|
| வகுப்பில் பங்குபெறுபவரின் பெயரும், முன்பெயரும் அத்துடன் பிறந்ததிகதியும் |

**அத்துடன்**

| |
|---|
| வகுப்பு நிறுவனத்தின் பெயரும் விலாசமும் |

**பின்வரும் ஒப்பந்தம் செய்யப்படுகிறது:**

## 1. செலவுப்பங்களிப்பு

தொழில்மொழிவகுப்பில் பங்குபெறுதல் அடிப்படையில் இலவசமானது.

எஸ்ஜீபி II க்கு இணங்க வாழ்க்கைச் செலவிற்கு கிரிகைகள், எஸ்ஜீபி XII அல்லது அசூல்பிஎல்பி இணங்க உதவிபெறாதவர்கள் அல்லது வேலைஇழந்தவர்கள் பணம் I பெறுவதற்கான உரிமைஅற்றவர்கள், எஸ்ஜீபி III ன் § 57 பகுதி 1 க்கு இணங்க ஒரு தொழில்படிப்பு படிக்காவிடின் அல்லது ஒரு வேலைஆரம்பிக்கும் தகமைத்திட்டத்தில் உள்ளவர்கள் அத்துடன் அவர்கள் வருமானம் தனிநபராக வரிநியமிக்கப்படும் நிலமையில் 20.000€ க்கு மேலாக இருந்தாலும் அல்லது உங்கள் கணவர் அல்லது மனையுடன் சேர்ந்து வரிநியமிக்கப்படும் நிலமையில் 40.000€ க்கு மேலாக இருந்தால், அவர்கள் இதிலிருந்து விலக்கப்பட்டுள்ளார்கள். இப்படியானவர்கள் ஒரு செலவுப்பங்களிப்பை கட்டாயம் செய்தல் வேண்டும். வகுப்பு நிறுவனம் இதில் பங்குபெறுபவர்களுக்கு செலவுப்பங்களிப்பு பற்றிய விதிகளை பதியும் போது குறிப்பிட வேண்டும். முழு வகுப்புக்குமான செலவுப்பங்களிப்பு வகுப்பு ஆரம்பத்தில் வகுப்பு நிறுவனத்திற்கு செலுத்தவேண்டும்.

ஏனெனில் அவர்கள் வரிகட்டவேண்டிய வருடவருமானம் மேல்குறிப்பிடப்பட்ட தொகைஎல்லையைத் தாண்டாததால், இலவசமாக ஒரு தொழில்மொழிவகுப்பில் பங்கேற்பவர்கள், அவர்களின் செயல்களால் தொழில்மொழிவகுப்பு இடைமுறிக்கப்படுமானால் ஒரு செலவுப்பங்களிப்பை வகுப்பு நிறுவனத்திற்குக் கட்டவேண்டும் என்ற கடமைப்பட்டவர்கள்.

பங்குபெறும் வேலையாளி தனது பிழையால் வகுப்பு முறிக்கப்டாவிட்டால் ஒரு நம்பக்கூடிய ஆதாரத்தை சமஷ்டிஅலுவலகத்திற்கு கையளிக்க வேண்டும்.

பாடப்புத்தகங்கள் வகுப்புநிறுவனத்தால் பங்களிப்பவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும்.

## 2. போக்குவரத்துச் செலவுகள்

**பங்குபெறுபவர்கள்,**

- வேலையற்றவர்பணம் I (எஸ்ஜீபி III)
- வேலையற்றவர்பணம் II (எஸ்ஜீபி II)
- சமூகநலஉதவி (எஸ்ஜீபி XII)
- இழைஞர்கள்உதவி (எஸ்ஜீபி VIII, அகதிஅந்தஸ்துகோரியவர்கிரிகைச் சட்டத்தின் பணத்திற்குப் பதிலாக
- அகதிஅந்தஸ்துகோரியவர்கிரிகைச் சட்டத்தின் பணம் (அசூல்பிஎல்ஜி) அல்லது
- தொழில்படிப்புஅனுசரிஉதவி § 56 எஸ்ஜீபி III

தேவையான போக்குவரத்துச் செலவுகளுக்கான உதவிப்பணத்தை பெற்றுக்கொள்ள முடியும். பாடவகுப்பு நடைபெறும் காலத்தில் கிரிகைகள் பெற்றுக்கொள்ளல் நிறுத்தப்படுமானால், வகுப்பில் பங்குபெறுபவர் இதனை பாடசாலைநிறுவனத்திற்கும் சமஷ்டிஅலுவலகத்திற்கும் உடனடியாக அறியத்தரவேண்டும்.

உங்கள் பாடசாலை நேரடிநடைவழி வீட்டிலிருந்த பாடசாலைக்கும் அல்லது அத்தாட்சிப்பத்திரசோதனை நடைபெறும் இடம் குறைந்தது 3 கிலோமேற்றர் தூரத்தில் இருந்தால், ஒரு போக்குவரத்துச் செலவு பொது உதவித்தொகை வழங்கப்படும். இந் விண்ணப்பநிராகரிப்புக்கு எதிராக வகுப்பில் பங்குபெறுபவர் எதிர்ப்புத் தெரிவிக்கலாம் அல்லது வகுப்பில் பங்கேற்பவருக்குப் பதிலாக அது எதிர்ப்பு தெரிவிப்பதற்கு பாடசாலை நிறுவனத்திற்கு உரிமைவழங்கலாம்.

போக்குவரத்துச் செலவு உதவித்தொகை வழங்கப்படும் என சமஷ்டிஅலுவலகத்தால் அனுமதிக்கப்பட்டால், அது வகுப்புக்குச் செல்லும் முழுக்காலங்களுக்கும் செல்லுபடியாகும். போக்குவரத்துக் கட்டணத்தொகைமாற்றங்களில் அவ் அனுமதி மாறமாட்டாது. வதிவிடம் அல்லது பாடசாலைநடைபெறும் இடம் மாற்றப்படும்போது இவ் அனுமதி செல்லுபடியற்றதாகிவிடும். தேவையானால் ஒரு புதிய விண்ணப்பம் கட்டாயம் செய்யப்படவேண்டும்.

## 3. குழந்தைப்பராமரிப்பு

வகுப்பு நிறுவனம் குழந்தைப் பராமரிப்பு பற்றிய தேடல் விடயங்களுக்கு வகுப்பில் பங்குபெறுபவர்களுக்கு உதிவிசெய்யும்.

## 4. பாடவகுப்புஆரம்பம்

பங்குபெறஅனுமதியுள்ளவர் ஒரு தொழில்மொழிவகுப்புக்கு பதியப்பட்ட பின் 4 கிழமைக்குள் செல்லவேண்டும். வகுப்பு நடைபெறாத பட்சத்தில், வகுப்பு நிறுவனம் ஒரு பொருத்தமான வகுப்பு நடைபெறும் இன்னொரு வகுப்பு நிறுவனத்திற்கு வகுப்பில்பங்குபெறுபவர்களை கட்டாயம் அனுப்பவேண்டும். வகுப்பு நிறுவனம் வகுப்பில்பங்குபெறுபவர்களுக்கு மூல–

அனுமதியை கையளிக்க வேண்டும் அத்துடன் சமஷ்டிஅலுவலகத்திற்கு வேறொரு வகுப்பு நிறுவனம் நிபார்சுசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கவேண்டும்.

பங்குபெறுபவர் தனது விலாச மாற்றங்களை உடனடியாக வகுப்புநிறுவனத்திற்கு கட்டாயம் அறியத்தரவேண்டும். வகுப்பிலிருந்து வேறொரு வகுப்பிற்கு மாறுவது ஒரு கடின நிலையினால் தான் இயலும். ஒரு கடின நிலை உ+ம் ஏற்படும் எப்போதென்றால், வீடு மாறியபின் புதிய வதிவிடத்திலிருந்து பாடசாலைக்கு 90 நிமிடங்களின் பின் தான் சென்றடையலாம் என்ற நிலமை. வகுப்புமாற்றம் வகுப்பில்பங்குபெறுபவரால் இதற்குப்பொறுப்பான பம்வ் மத்தியஇடத்தில் கட்டாயம் விண்ணப்பிக்கப்படவேண்டும்.

முழுவகுப்பு நிறுத்தப்படவேண்டிய கட்டாய நிலை வகுப்பு நிறுவனத்தால் ஏற்படின், அந் நிறுவனம் வகுப்பில்பங்குபெறுபவருக்கு வேறொரு பதில் வகுப்புக்கு தொடர்புபடுத்த வேண்டும்.

## 5. பாடவகுப்பு நடைபெறும் போது நடத்தைகள்

பாடவகுப்புக்கு ஒழுங்காகவும் சரியான நேரத்திலும் செல்லவேண்டும். வகுப்பின்பங்கெடுப்பவர் பாடவகுப்பு நன்றாக நடைபெறுவதற்கு தன்னிச்சையாக தனது பங்களிப்பை வழங்கவேண்டும்.

வகுப்பு நிறுவனத்தின் பாடசாலைவிதிகளை கடைப்பிடிக்கவேண்டும். பாடசாலைவிதிகளுக்கு எதிரான குற்றங்கள் பாடவகுப்பிலிருந்து விலக்கப்படும் நிலையைக் கொணரலாம்.

## 6. வகுப்பிற்குச் செல்லாமை

பாடவகுப்புநடைபெறும் காலங்களில் சொந்தமாக திட்டமிடப்பட்ட விடுமுறை இயலாது.

வகுப்பு நிறுவனம் வகுப்பில்பங்குபற்றுபவரால் மொழிவகுப்புநிறுத்தப்படுதலை உடனடியாக சமஷ்டிஅலுவலகத்திற்கு அத்துடன் பங்குபெறுவதற்கானஅனுமதிவழங்கிய நிலையத்திற்கும் அறியத்தரும். அதற்குமேலாக வகுப்புநிறுவனம் வேலைமையத்தால் பங்குபெறவேண்டும் எனக் கட்டாயப்படுத்தப்பட்டவர்களின் பெயர்களை, தொடர்ச்சியின்றி வகுப்பில் பங்குபெறுவதால், இவ் வகுப்பை வெற்றியுடன் பூர்த்திசெய்ய முடியாத ஆபத்துநிலை ஏற்படுமானால், உடனடியாக வேலைமையத்திற்கு அறியத்தரும் (இ.பெ.மி. § 9 பகுதி 5 வசனம் 2 டோஎவ்ஓவி).

வகுப்பு நிறுவனத்திற்கு அறிவிக்கும் கட்டாயம் குறிப்பாக இருக்கும், வகுப்பில்பங்குபெறுபவர்:

- வகுப்பு ஆரம்பிக்கும் நாளில் மன்னிப்பின்றி
- குறைந்தது மூன்று நாட்கள் தொடர்ந்து மன்னிப்புடன் அல்லது மன்னிப்பின்றி
- 20%க்கு மேலாக பாடவகுப்புகளுக்கு வராதிருந்தால்.

ஒரு பங்குபெறுபவர், அவர் பங்குபெற வேண்டிய தொழில்மொழிவகுப்பிற்கு, 30%க்கு மேலாக வகுப்புகளுக்கு வராதிருந்தால், அவ் வகுப்பின் வெற்றியான பூர்த்தி முழுமையாக எதிர்பார்க்கப்படமாட்டாது. அந் நிலையில் வகுப்புநிறுவனம் பங்குபெறுபவர் வகுப்பை நிறுத்திவிட்டார் என்பதை வேலைத்திணைக்கழஅலுவலகத்திற்கும் அல்லது வேலை மையத்திற்கும் அத்துடன் சமஷ்டிஅலுவலகத்திற்கும் அறியத்தரவேண்டும்.

வகுப்பில்பங்குபெறுபவர் பாடவகுப்பிற்கு வராவிடின், அவர் தனது மன்னிப்புக்கான ஆதாரத்தை கட்டாயம் எப்போதும் வழங்கவேண்டும். ஆதாரம், உ+ம் வைத்தியரின் அத்தாட்சிப் பத்திரம், வகுப்பு நிறுவனத்திற்கு உடனடியாக கட்டாயம் கொடுக்கப்படவேண்டும். பின்வரும் காரணங்களால் வகுப்பில்பங்கேற்பவர் பாடவகுப்பில் பங்குபெறாமல் விடயலாம்:

| | |
|---|---|
| **நோய்** | **ஒரு வகுப்புநாள் வரை,** வகுப்பில் பங்குபெ–றுபவர் வகுப்புநிறுவனத்திற்கு தனது நோயைப் பற்றி தொலைபேசி–/ வாய்மூலம் (இதுசம்பந்தமாக வகுப்பு நிறுவனம் ஒரு எழுத்துமூலமான குறிப்பொன்றைத் தயாரிக்கும்) அல்லது எழுத்து மூலம் நோய் ஆரம்பித்தவுடன் அறியத்தந்தால்<br>**இரண்டாவது வகுப்புநாளிலிருந்து** ஒரு வைத்தியரின் அத்தாட்சிப் பத்திரம் கொடுக்கப்படவேண்டும். |
| **வேறோரு பராமரிப்பு நபர் இல்லாதபட்சத்தில், ஒரு நோய்வாய்ப்பட்ட 12. வயதை இன்னமும் அடையாத குழந்தைப் பராமரிப்பு** | குழந்தைப் பராமரிப்பு அவசியம் என்ற ஒரு வைத்தியரின் அத்தாட்சிப் பத்திரத்தை கொடுக்கும் போது, இது 1. வது பாடவகுப்பிலிருந்து செல்லுபடியாகும் |
| **8. வயதை இன்னமும் அடையாத குழந்தை பராமரிப்பு எதிர்பாராதவிதமாக நிறைவேறாத நிலை (உ+ம் ஆண்/பெண குழந்தைப் பராமரிப்பாளர் சுகவ–ீனமடைந்தால்)** | இதற்குப் பொறுப்பான பராமரிப்புநிலையத்தின் உறுதிப்படுத்தினால் |
| **குழந்தைப்பாரமரிப்பு இரத்துச்செய்யப்பட்டால் அல்லது பாட–சாலை நடைபெறாவிட்டால், அப் பாடசாலை/குழந்தைப் பராமரிப்புநிலையம் மூடப்படுதல் ஒரு அலுவலகத்தால்/ மானிலஅரசாங்கத்தால் கட்டளையிடப்பட்டிருந்தால் அத்துடன் பராமரிக்கப்படும் பிள்ளை 12வது வயதைத் தாண்டாதிருந்தால்** | மூடப்படுதல் பற்றிய ஒரு அதற்குப் பொருத்தமான ஆதரம் வழங்கப்பட்டிருந்தால் (மானிலம் முழுவதுமான அல்லது சகல மாவட்டம் முழுவதுமான அல்லது மாவட்டம் அற்ற நகரத்திற்கும் அமுலிலுள்ள மூடப்படும் கட்டுப்பாடு இருந்தால் அது தவிர்ககப்படலாம்) |
| **ஒரு ஆண்/பெண் சொந்தக்காரரின் பராமரிப்பு, அவர் /அவள் வகுப்பில்பங்குபெறுபவரின் ஒரே வீட்டில் வாழ்ந்துவந்தால்** | சொந்தக்காரரின் பராமரிப்பு அவசியம் என்பதற்கான வைத்தியரின் அத்தாட்சிப் பத்திரத்தை வழங்கியிருந்தால் |
| **வகுப்பில்பங்கேறுபவரின் திருமணம்** | **இரண்டு நாட்கள்,** இது பற்றிய ஒரு ஆதரம் (திருமணஅத்தாட்சிப் பத்திரம்) வழங்கப்பட்டிருந்தால் |

| | |
|---|---|
| **குழந்தைபிறப்புஓய்வுப்பாதுகாப்பு** | இது பற்றிய ஒரு ஆதாரம் (வைத்தியரின் அத்தாட்சிப் பத்திரம்) வழங்கப்பட்டிருந்தால் |
| **பங்குபெறுபவரின் மனைவி அல்லது பெண்பங்காளியின் குழந்தைபேறு** | **இரண்டு நாட்கள்,** இது பற்றிய ஒரு ஆதரம் (வைத்திய உறுதிப்படுத்தல், பிறப்புஅத்தாட்சிப் பத்திரம்) வழங்கப்பட்டிருந்தால் |
| **கணவனின்/மனைவியின், ஒன்றுசேர்ந்துவாழும் விதத்தின் சட்டத்திற்கு இணங்க ஒன்றுசேர்ந்து வாழும் ஆண்பங்காளியின் /பெண்பங்காள–யின், ஒரு குழந்தையின் அல்லது பெற்றோர் ஒருவரின் இறப்பு** | **இரண்டு நாட்கள் வரை,** இது பற்றிய ஒரு ஆதரம் வழங்கப்பட்டிருந்தால்<br>**இரண்டு நாட்கள் வரை,** ஆண்/பெண் சொந்தக்காரரின் ஈமைக்கிரிகைகள் வெளிநாட்டில் நடைபெற்றால் |
| **அலுவலகங்களால் அழைக்கப்பட்டிருந்தால் (வெளிநாட்டவர்அலுவலகம் / நீதிமன்றம்)** | இது பற்றிய ஒரு ஆதரம் வழங்கப்பட்டிருந்தால் |
| **கிரிகைவழங்கியவரினால் வகுப்பிற்கு வராமலிருக்கலாம் என்ற அனுமதி** | இது பற்றிய ஒரு ஆதரம் வழங்கப்பட்டிருந்தால் |
| **வேலையாளியின் அத்துடன் தொழில்படிப்பவருக்கான வேலைகொடுப்பவரால் அனுமதிக்கப்பட்ட விடுமுறைவிண்ணப்பங்கள்** | அனுமதிக்கப்பட்ட விடுமுறைவிண்ணபத்தின் பிரதி |
| **வீட்டில் கட்டாயம் தரித்திருக்கவேண்டும் என்ற கட்டளை வதிவிடத்திற்குப் பொறுப்பான அலுவலகத்தால் விதித்திக்கப்படுதல்** | அதற்குப் பொருத்தமான ஆதரம் வழங்கப்பட்டிருந்தால் (வதிவிடவிலாசத்திற்கு பொதுவாத் தெரிந்த அமுலிலிருக்கும் கட்டளைச் சந்தர்பத்தில் அது தவிர்க்கப்படலாம்) |
| **கோவிட்–19 நோய் உள்ளதா என அறிந்துகொள்வதற்கான பரிசோதனையில் பங்குபெறுதல்** | பரிசோதனை நாளுக்கும் அத்துடன் பரிசோதனையில் முடிவு வரும்வரை காத்திருக்கும் நாட்களுக்கு, அதற்குப் பொருத்தமான ஆதரம் வழங்கப்பட்டிருந்தால் |
| **ஒரு நோய்வரும் சாத்தியமுள்ள ஆபத்தான குழுவில், அது வைத்திய ரீதியில் கோவிட்–19 நோயுடன் சம்பத்தமாக கடும் வருத்தம் ஏற்படும் என்றிருந்தால், அச் சந்தர்ப்பத்தில் கணனி மூலம் விட்டில–ருந்து படிப்பிக்கும் வகுப்பு இல்லாதிருந்தால்** | நோய்வரும் சாத்தியமுள்ள ஆபத்தான குழுவில் உள்ளீர்கள் என்ற ஒரு வைத்தியரின் அத்தாட்சிப் பத்திரம் வழங்கப்பட்டிருந்தால்<br><br>குறிப்பு: வகுப்பில் நேரடியாகச் சென்று பங்கேற்பது நோய்வரும் சாத்தியமுள்ள ஆபத்தான குழுவில் உள்ளீர்கள் என்பது பொருத்தமாகவிருந்தாலும் உங்கள் தன்னிச்சையான முடிவாகும் |

வகுப்பு நிறுவனம் கையளிக்கப்பட்ட வைத்தியரின் வைத்திய அத்தாட்சிப் பத்திரங்களை அல்லது இதர ஆதாரங்களை வகுப்பில் பங்குபெறாததிற்கான காரணங்களுக்காக பாதுகாத்து வைத்திருக்கும்.

## 7. அத்தாட்சிப்பத்திரப் பரீட்சைகள்

வகுப்புநிறுவனம் ஒவ்வொரு தொழில்மொழிவகுப்புகளில் பங்கேற்பவருக்கு ஒரு பரீட்சைக்கான வசதிசெய்யும். துறைசார் வகுப்புகளில் உ+ம் விற்பனை அல்லது வியாபாரம்/தொழில்நுட்பம் அத்தாட்சிப்பத்திரத்திற்குப் பதிலாக இதுவரை நிறைவேற்றிய படிப்புமுன்னேற்றம் பற்றிய ஒரு பங்கேற்றுப் பத்திரம் வழங்கப்படும். சித்தியடையாத பட்சத்தில் ஒவ்வொரு அத்தாட்சிப்பத்திரப் பரீட்சைக்கு மேலும் ஒரு முறை தோற்றலாம்.

வகுப்பில்பங்குபெறுபவர், அவர் பரீட்சையில் சித்தியடையாமல், வகுப்பின் மீண்டும் ஒரு முறை படிப்பதற்கு, வேலைத்திணைக்கழஅலுவலகத்தில் அல்லது வேலைமையத்தில் ஒரு விண்ணப்பம் செய்லலாம்.

அத்தாட்சிப்பத்திரப் பரீட்சையும் அத்தாட்சிப்பத்திரப் பரீட்சையில் மீண்டும் தோற்றுவதும் வகுப்பில் பங்குபெறுபவருக்கு இலவசமானது.

ஒரு வகுப்பில் பங்குபெறுபவர், மீண்டும் பரீட்சையில் சித்தயடையாவிடின், அவர் வகுப்பு நிறுவனத்திலிருந்து ஒரு இதுவரை நிறைவேற்றிய படிப்புமுன்னேற்றம் பற்றிய பங்கேறுப் பத்திரம் பெற்றுக்கொள்வார். இப் பங்கேற்றுப் பத்திரத்தின் பிரதி ஒன்று வகுப்பு நிறுவனத்தால் சமஷ்டிஅலுவலகத்திற்கும், வேலைத்திணைக்கழஅலுவலகத்திற்கும் அல்லது வேலை மையத்திற்கும் அனுப்பப்படவேண்டும். இது அத்தாட்சிப்பத்திரப் பரீட்சையில் பேறுபவர்களுக்கும் ஏற்றதாகும்.

## 8. தரவுகள்சேகரிப்பு

வகுப்பில்பங்குபெறுபவர் சம்பந்தமான தரவுகள் அதுபற்றிய (தரவுப்பாதுகாப்புசட்டரீதியானதும்) சட்டவிதிகளைக் கடைப்பிடித்து தொழில்மொழிவகுப்பு நடைமுறைப்படுத்தப்படுதலுக்கும் அத்துடன் அதன் கணக்குவழக்கு முடிப்பதற்கும் பயன்படுத்தப்படுவதுடன் இதற்கு அனுமதியுள்ள நிலையங்களுக்கு (சமஷ்டிஅலுவலகம், வேலைத்திணைக்கழ அலுவலகம் அல்லது அடிப்படைவாழ்வுதவிக்கான நிலையம்) கொடுக்கப்படுவதுமாத்திரம் அனுமதிக்கப்பட்டுள்ளது. வேறு, குறிப்பாக வியாபாரத் தேவைக்காக, அத் தரவுகளைப் பயன்படுத்த அத்துடன் அனுமதியற்ற மூன்றாவது நபர்களுக்கு கொடுக்கப்படுவதற்கு அனுமதிக்கப் படவில்லை.

வகுப்பில்பங்குபெறுபவர் சம்பந்தமான தரவுகள் ஐந்து வருடங்களுக்குப் பிந்தாமல் வகுப்பு நிறுவனத்தால் அழிக்கப்படவேண்டும்.

வகுப்பில்பங்குபெறுபவர் தனது விடயம் பற்றிய ஆவணங்களை பார்க்க உரிமையுள்ளவர்.

,
இடம், திகதி

______________________________________
வகுப்பில்பங்குபெறுபவரின் கையொப்பம்

______________________________________
வகுப்பு நிறுவனத்தின் கையோப்பம்

(தயவுசெய்து கவனிக்கவும்: கையொப்பம் இல்லாமல் பங்குபெறஉரிமையுள்ளவர்கள் பங்குபெற முடியாது. *18* வயதுக்குக் குறைந்த பங்குபெறுபவர்களுக்கு பெற்றோரின் அல்லது சட்டரீதியிலான பொறுப்பாளரின் கையோப்பம் தேவையானது)